(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 186.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2017 ஆகஸ்ட் 08 செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

65/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகங்களில் பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்காக உத்தியோகத்தர்களை நியமிக்கும்போது பரிசீலிக்கப்படும் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) பாதுகாப்பு ஆலோசகர் பதவியின் கடமைப்பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களது சேவைக் காலம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது வெளிநாடுகளில் இலங்கைத் தூதரகங்களில் சேவையாற்றி வருகின்ற பாதுகாப்பு ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்கள் மேற்படி பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்தன துருக்கி நாட்டுக்கான இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) வேலை இடைநிறுத்தத்திற்கு உள்ளாக்ககப்பட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு இத்தகையதொரு பதவியை வகிப்பதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அச்சட்ட ஏற்பாடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1115/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, டொரிங்டன் சதுக்கம், நாராஹேன்பிட்ட ஆகிய பிரதேசங்களில் பல அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி பிரதேசங்கள் ஊடாக செல்கின்ற 173 வீதி இலக்கத்தைக் கொண்ட மட்டக்குளிய-நுகேகொட மற்றும் 115 வீதி இலக்கத்தைக் கொண்ட டொரின்டன் ஊடாக புறக்கோட்டை – நுகேகொட ஆகிய வீதிகளில் இன்றளவில் இலங்கை போக்குவரத்து சபைக்குரிய பேரூந்துகள் எதுவும் சேவையில் ஈடுபடுவதில்லை என்பதையும்;

(iii) இதன் காரணமாக, மேற்படி வீதிகளில் பயணிக்கின்ற பொதுப் பயணிகளும் அதேபோன்று அலுவலக ஊழியர்களும் பெருமளவில் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) 173 மற்றும் 115 வீதி இலக்கங்களைக் கொண்ட பேரூந்துப் பயண வீதிகளில் குறைந்த பட்சம் இபோச பேரூந்து ஒன்றையாவது சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1266/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளினால் கிழக்கு மாகாணத்தின் ஐந்து பொலிஸ் நிலையங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதில் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அத்தாக்குதலின் போது காணாமல்போன பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தாக்குதலின்போது ஏற்பட்ட சொத்துகளுக்கான சேதம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அது எவ்வளவென்பதையும்;

(v) அந்த அழிவுக்கு பொறுப்புக்கூற வேண்டிய பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(vi) சம்பந்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) இந்த சம்பவம் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1362/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அபிவிருத்திப் பணிப்பொறுப்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை செலுத்துவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள மாத்தறை மாவட்டத்திலுள்ள தனியார் நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் அங்கத்துவத்தை பெற்றுக்கொண்டுள்ள மாத்தறை மாவட்டத்திலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கமைய தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் பதிவு செய்யப்படுவதற்கு இருக்க வேண்டிய குறைந்தபட்ச தேவைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1368/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அண்மையில் தரமுயர்த்தப்பட்ட தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்துடன் எட்டு தேசிய பாடசாலைகள், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை கல்வி வலயத்தில் உள்ளனவென்பதையும்;

(ii) இதுவரை மேற்படி தேசிய பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் நியமிக்கப்படவில்லையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலைகளில் நிரந்தர அதிபர்கள் உள்ளனரென தவறான தகவல்கள் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(iv) கல்வி அமைச்சின் சீரான மேற்பார்வையின்றி மேற்படி பாடசாலைகள் இயங்குவதாக இலங்கை கல்வி நிர்வாக உத்தியோகத்தர்களின் சங்கம் குற்றஞ்சாட்டுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் கட்டாயமாக பட்டதாரிகளாக இருக்க வேண்டுமென்ற பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட பாடசாலைகளுக்கு தகுதியான நிரந்தர அதிபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இது நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

1389/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் 141 ஆம் இலக்க முன்மொழிவுக்கமைவாக, உள்நாட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு பக்கெற்றிற்கு ரூபா 30/- மானியம் பெற்றுக்கொடுப்பதற்கு முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பால் உற்பத்திக்கான மானியத்தின் சார்பில், வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 1000 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்ட விதத்தை தெளிவுபடுத்துவாரா என்பதையும்;

(iii) பால் உற்பத்திக்கான மானியமானது எந்த அமைச்சின் ஊடாக எந்த நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதென்பதையும்;

(iv) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கையில் பால் உற்பத்தியானது ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனை மில்லியன் லீற்றர்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7\.

1393/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) களுத்துறை மற்றும் வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களிலுள்ள விவசாயிகள் உரமானியத்தை பெற்றுக்கொள்ள வந்த போது மானியத்துக்கான விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் நிழற்பட பிரதியொன்றையும் சமர்ப்பிக்க வேண்டுமென குறிப்பிட்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார் என்பதையும்;

(ii) அநேகமான விவசாயிகள் தேசிய அடையாள அட்டை இல்லையென கூறியபோது அடையாள அட்டையின் பிரதியை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டுமென சுற்றுநிருபமொன்று அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளார் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அந்தப் பிரதேச விவசாயிகளிடம் உள்ள முதியோர் அடையாள அட்டை, கடவுச் சீட்டுக்கள், சாரதி அனுமதிப் பத்திரங்கள் என்பவற்றை தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இந்த சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8\.

1507/ '17

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் அரசாங்கம் பெற்றுக்கொண்ட மொத்தக் கடன்களின் பெறுமதி யாது;

(ii) 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட கடன்களுக்காக செலுத்த வேண்டிய நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் யாது;

(iii) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பீட்டளவில், 2016 ஆம் ஆண்டில் நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் மாற்றமடைந்துள்ள பெறுமதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9\.

1560/ '17

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "கமட்ட சவிய - சதொச படிய" நடமாடும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் தற்போது அமுலில் உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதி யாது என்பதையும்;

(iv) இதற்காக ஏற்கப்பட்ட மொத்தச் செலவு பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை ஆரம்பிக்க முன்னர் உரியவாறான சாத்தியக்கூறுக் கற்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) இன்றேல், கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் தேவை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1569/ '17

கௌரவ இம்ரான் மஹரூப்,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்ட மூலங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மூலத்திலிருந்தும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அதற்கென செலவிடப்பட்ட மொத்தச் செலவு எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ் விளையாட்டு மைதானம் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் திறந்து வைக்கப்பட்டதென்பதையும்;

(ii) அதன் நினைவுப் பலகையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரின் பெயர்கள் மாத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி பெயர்கள் குறிப்பிடப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(ii) அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள நிலையில் இவர்களுடைய பெயர்கள் மேற்படி நினைவுப் பலகையில் குறிப்பிடப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானத்துக்கு இடப்பட்டுள்ள பெயர் தொடர்பாக ஏற்புடைய செயல் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அரச நிதியில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது ஒரு கட்சிக்கு மாத்திரம் முன்னுரிமை அளித்து கட்சியொன்றுக்கு பிரச்சாரத்தை தேடித்தருவது நல்லாட்சியின் ஓர் பண்பாகுமென ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(v) இத் தவறை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

11.

1574/ '17

கௌரவ பிமல் ரத்நாயக்க,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அண்மித்த 5 கல்வி ஆண்டுகளினுள் அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் மஹபொல உயர் கல்விப் புலமைப்பரிசில் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) தற்போது மஹபொல புலமைப்பரிசிலுக்காக மாதாந்தம் செலுத்தப்படுகின்ற பணத் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹபொல புலமைப் பரிசில்களை வழங்கும் போது திறமை அடிப்படையில் (on merit basis) புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு மாணவர்களை தெரிவு செய்யும் முறையியல் யாது என்பதையும்;

(ii) கடந்த அண்மித்த 5 கல்வி ஆண்டுகளினுள், மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயிரியல், கணிதம், வணிகம் மற்றும் கலை பாடப் பிரிவுகளுக்காக திறமை அடிப்படையில் மஹபொல புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, கல்வி ஆண்டு மற்றும் பாடப் பிரிவுகளுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி 5 கல்வி ஆண்டுகளினுள், மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள மாணவர்களில், அந்தந்த பாடப் பிரிவுகளுக்கு அமைய, குறைந்தபட்ச தகைமையினை பெற்றுள்ள மாணவ மாணவிகளின் க.பொ.த. (உ.த.) பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய குறித்த மாவட்ட நிலை (District Rank) மற்றும் நாடளாவிய நிலை (Island Rank) கல்வி ஆண்டு மற்றும் பாடப் பிரிவுகளுக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

12.

1673/ '17

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கல்வி நிர்வாகச் சேவை II ஆம் வகுப்பைச் சேர்ந்த அலுவலரான திரு. ஏ.எல்.எம். முக்தார் அம்பாறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றுகிறார் என்பதையும்;

(ii) அம்பாற வலயக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றுகின்றவர் இலங்கை கல்வி நிர்வாகச் சேவையில் திரு. முக்தாரை விட கனிஷ்ட அலுவலர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கனிஷ்ட அலுவலர் ஒருவரின் கீழ் உயர்தரமுடைய சிரேஷ்ட அலுவலர் ஒருவர் பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுவாரா என்பதையும்;

(ii) திரு. முக்தாரை அவரின் தரத்திற்கும், மூப்புரிமைக்கும் ஏற்ப இடமாற்றமொன்றினை அவருக்கு வழங்குதல் அல்லது திரு. முக்தாரை விட சிரேஷ்ட அதிகாரியொருவரை அம்பாறை வலய, வலயக் கல்விப் பணிப்பாளராக நியமித்தல் ஆகியவற்றின் மூலம் இந்த முறைகேட்டினை நிவர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆம் எனில் எப்போது என்பதையும்;

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

13.

1748/ '17

கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்,— உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொண்டர் கிராம உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்க வேலைத்திட்டம் ஏதும் உள்ளதா என்பதையும்;

(iii) பிரதேச செயலக மட்டத்தில் பணியாற்றும் கிராம உத்தியோகத்தர்களின் இடங்களை (பிரிவுகளை) மாற்ற முடியுமா என்பதையும்;

(iv) கிராம உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒரு பிரிவில் எத்தனை வருடங்கள் சேவையாற்றலாம் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1369/ '16

கௌரவ டக்ளஸ் தேவானந்தா,— சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தின், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், ஓமந்தை சந்திக்கு கிழக்கே 7 கிலோ மீற்றர் தூரத்தில், இளமருதங்குளம் கிராமமும், அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தூரத்தில் சேமமடு கிராமும் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) யுத்த நிலைமைக்கு முன்னர் இக்கிராமங்களில் 500 குடும்பங்கள் வாழ்ந்துவந்ததுடன், யுத்த நிலைமை முடிவடைந்ததன் பின்னர் தற்போது இளமருதங்குளம் கிராமத்தில் 19 குடும்பங்களும், சேமமடு கிராமத்தில் 65 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன என்பதையும்;

(iii) இக்கிராமங்களில் யுத்த நிலைமைக்கு முன்னர் சுமார் 1100 ஏக்கர் அளவான காணிப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தற்போது காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக விவசாயம் செய்வதற்கு முடியாத நிலைமை உருவாக்கியுள்ளது என்பதையும்;

(iv) இம்மக்களுக்கென எந்தவொரு வீடமைப்புத் திட்டமும் அமுல்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இளமருதங்குளம் மற்றும் சேமமடு கிராமங்ளில் வாழும் மக்களின் நலன்புரிக்காக தற்போது கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றேல், எதிர்காலத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

15.

1390/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் 136 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் நெல் விவசாயிகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூபா 25,000/- உச்சளவின் கீழ் விநியோகிக்கப்பட்ட உர மானியத்தை பெற்றுக்கொண்டவர்களின் பெயர் பட்டியலொன்றை அத்தகைய ஒவ்வொரு ஆளுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி அளிப்புகளுடன் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) 2005-2016 வரை ஒவ்வொரு ஆண்டுக்காகவும் உர மானியத்திற்கென அரசாங்கத்தினால் ஏற்கப்பட்ட செலவினம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டில் உர மானியத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூபா 35,000 மில்லியன் தொகையில் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 37,500 மில்லியன் தொகையில் சேமிக்கப்பட்ட தொகை இருக்குமாயின், அத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றச்செயல்களைத் தடுத்தல் (திருத்தம்),— (22 ஆம் அத்தியாயமான) குற்றச்செயல்களைத் தடுத்தல் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவக சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 4.

பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளல்,—

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41(ஆ) ஆவது உறுப்புரை மற்றும் 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 3 மற்றும் 3(4) பிரிவுகளின் பிரகாரம், மனித உரிமைகள் துறை சம்பந்தமான பரந்தளவிலான அறிவு மற்றும் செயன்முறை ரீதியிலான அனுபவத்தைக் கொண்ட பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சட்டத் திணைக்களத்தின் தலைவராக பணியாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக மூன்று (03) வருட காலத்திற்கு 2015.10.30 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

2015.10.30 ஆம் திகதி முதல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்கள் மூன்று (03) வருட சேவைக் காலத்தின் பின்னர் மீண்டும் தனது நிரந்தரப் பதவிக்குச் செல்வதற்கு கருதியிருப்பதுடன், இந்த மூன்று (03) வருட காலப் பகுதியில் சகல படிகளும் உள்ளடங்கலான பல்கலைக்கழகச் சம்பளத்தை அவர் இழந்தால் அவருக்கு கிடைக்க வேண்டிய அனுகூலங்கள் மீது பாதிப்பு ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளாராதலாலும்;

அதற்கமைய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவராக கடமையாற்றும் கலாநிதி திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் செல்லுபடியாகும் வகையில் அவர் சேவையாற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சகல படிகளும் உள்ளடங்கிய முழு நேர விரிவுரையாளருக்குரிய சம்பளத்தை 2015.10.30 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கும், ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்குரித்தான ரூபா 10,000/- மாதாந்தத் தொலைபேசிக் கொடுப்பனவு, தனிப்பட்ட பாவனைக்கு உரிமையைக் கொண்ட உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் அந்த வாகனத்திற்கு 225 லீட்டர் எரிபொருள் அல்லது சந்தையில் நிலவும் எரிபொருளுக்கான விலைக்குச் சமமான எரிபொருள் கொடுப்பனவைச் செலுத்துவதற்கும் 2017.06.13 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாதலாலும்;

அதற்கமைய, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரான திருமதி நெலும் தீபிக்கா உடகம அவர்களுக்கு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்தச் சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் பிரிவு 6 (உ) மற்றும் பிரிவு 21 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 51 இன் கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் ரஷ்ய சம்மேளனத்திற்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 07 ஆம் திகதிய 2022/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— மீள ஒப்படைத்தல் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் உக்ரைனுக்கும் இடையே மீள ஒப்படைத்தல் பொருத்தனை தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2017 யூன் 02 ஆம் திகதிய 2021/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 31 ஆம் திகதிய 2021/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 41 ஆம் பிரிவின் கீழ், தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகள் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 05 ஆம் திகதிய 2017/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.07.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

உண்ணாட்டரசிறைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2013),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2016.09.06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.01.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2012),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.03.24 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) பிரிவின் கீழ் 2017.05.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 18.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2011),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) பிரிவின் கீழ் 2016.12.10 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2011.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலைக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை ஆகியன அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 19.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— தேசிய சேமிப்பு வங்கியின் ஆண்டறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச் சட்டத்தின் 35(3) ஆம் உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் உட்பிரிவின் கீழ், 2017.01.24 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான தேசிய சேமிப்பு வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 20.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச்சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.01.25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்டதும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்பு உள்ளடங்கலான இலங்கை வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 21.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் (2015),— நிதிச் சட்டத்தின் 35(3) உட்பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான மக்கள் வங்கியின் வருடாந்த அறிக்கை மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 22.

அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் (2014),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) உட்பிரிவின் கீழ் 2017.03.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2014.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட சுயாதீன பட்டயக் கணக்காளர்களின் கருத்துக்கள் உள்ளடக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியின் வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.05.23 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 23.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்துக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.07.08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான அரச மருந்துக் கூட்டுத்தாபன ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 24.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1983 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(C) ஆம் பிரிவின் கீழ் 2016.07.21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் உள்ளடங்கலான ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் ஆண்டறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 25.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் (2013),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழில்நுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2016.08.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2013.12.31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்ட அரச மருந்து உற்பத்திக் கூட்டுத்தாபன வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதாரம், மனித சேமநலம் மற்றும் சமூக வலுவூட்டல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2017.07.04 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டது.)

* 26.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்களின் விலை குறித்தல் தொடர்பாக சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 27.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 28.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 29.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 30.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 31.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 27 ஆம் திகதிய 2012/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

32.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---